இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 01 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 26 – திங்கள்கிழமை 11 ஆகஸ்ட் 2025 – மதுரை 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 01 : Thiruvalluvar Year - 2056 - Aadi 26 - Monday 11 August 2025 - Madurai 28 Pages ₹ 5.00


# அரசியலில் தெளிவு - வரலாற்றில் ஆழம் - இன உணர்வில் தீரம் - கலை இலக்கியத்தில் செழுமை எனச் செயல்படும் தலைவர் கலைஞரின் மூத்த பிள்ளையை வாழ்த்துகிறேன்!

## ‘முரசொலி’யின் 84ஆம் ஆண்டு தொடக்கத்தை முன்னிட்டு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

சென்னை, ஆக. 11-

‘முரசொலி’ நாளிதழ்க்கு நேற்று (10.8.2025) 84ஆம் ஆண்டு பிறந்த நாள்.

இதனையொட்டி கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், “மூத்த அண்ணனுக்கு பிறந்த நாள். அரசியலில் தெளிவு, வரலாற்றில் ஆழம், இன உணர்வில் தீரம், கலை இலக்கியத்தில் செழுமை எனச் செயல்படும் தலைவர் கலைஞரின் மூத்த பிள்ளையை வாழ்த்துகிறேன்” என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் பதிந்துள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு :-

**மூத்த அண்ணனுக்குப் பிறந்தநாள்!**

**நெருப்பாறுகள் பல நீந்தி, கழகத்தின் மனச்சாட்சியாக தமிழ்நாட்டின் உரிமைக்குரலாக ஒலிக்கும் முரசொலிக்கு அகவை 84!**

**அரசியலில் தெளிவு, வரலாற்றில் ஆழம், இன உணர்வில் தீரம், கலை இலக்கியத்தில் செழுமை எனச் செயல்படும் தலைவர் கலைஞரின் மூத்த பிள்ளையை வாழ்த்துகிறேன்!**

**இன்றைய செய்திகளைப் பதிவு செய்து, கருத்தாழமிக்க கட்டுரைகளால் சிந்தனையூட்டி நாளைய வரலாற்றை எழுத உணர்வளிக்கும் முரசொலியின் பயணம் என்றென்றும் தொடரட்டும்!***

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.








பரம்பிக்குளம் - ஆழியாறு பாசனத்திட்டம்
உருவாக்கியவர்களின் திருவுருவச் சிலைகள்
திறப்பு விழா



பெருந்தலைவர் காமராசர் ▪ முன்னாள் ஒன்றிய அமைச்சர் சி.சுப்பிரமணியம் ▪ வி.கே.பழனிசாமி கவுண்டர் ▪ பொள்ளாச்சி நா.மகாலிங்கம்

பரம்பிக்குளம் ஆழியாறு திட்டப் பணிகளின் போது உயிர்நீத்த தொழிலாளர்களுக்கான
நினைவு அரங்கம் திறப்பு விழா !

பொள்ளாச்சி நீர்வளத்துறை அலுவலக வளாகத்திற்கு
சி.சுப்பிரமணியம் வளாகம்

புதிதாகக் கட்டப்பட்டுள்ள அரங்கங்களுக்கு
வி.கே.பழனிசாமி கவுண்டர் அரங்கம்
பொள்ளாச்சி நா.மகாலிங்கம் அரங்கம்
எனப் பெயர்கள் சூட்டும் விழா

தலைமை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

நாள் : 11.8.2025, திங்கள்கிழமை, மதியம் : 12.00 மணி
இடம்: நீர்வளத்துறை அலுவலக வளாகம், பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம்

செ.ம.தொ.இ / 900 / வரைகலை / 2025

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 600 009